இடைத்தேர்தல் தோல்வி பயத்தில் அவதூறுகளை கிளப்பி

பொய் வழக்கு - கைது நடவடிக்கைகளை செய்து வருகிறது த.வெ.க. அரசு!

கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் செய்தியாளர்களுக்குப் பேட்டி!

சென்னை, ஜூலை 3–

இடைத்தேர்தல் தோல்வி பயத்தில் அவதூறுகளையும், கைது நடவடிக்கைகளையும் செய்து வருகிறது த.வெ.க. அரசு என கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி. எம்.பி. எழிலரசன் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்துள்ளார். இது தொடர்பாக அவரது பேட்டி வருமாறு:–

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருப்பதும், மக்களுடைய தேவைகள் பூர்த்தியாகாமல் அவதிக்குள்ளாகி வருவதும், மின்வெட்டு பிரச்சினைகள் இருப்பதும், பாலியல் வன்முறைகள், கொலை, கொள்ளை, ஆணவக் கொலைகள் பெருகி இருக்கக்கூடிய சூழல் நிலவுகிறது.

இவ்வளவு மோசமான ஒரு ஆட்சியா என்று மக்கள் எல்லாரும் விமர்சிக்கக்கூடிய அளவிற்கு அளவிற்கு, அரசை எதிர்த்து மக்கள் கேள்வி கேட்கும் சூழல் நிலவி வருவதால் இதையெல்லாம் திசை திருப்புகிற வகையிலே இன்றைக்கு கூட முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவதூறு வழக்கில் உடனடியாக அவரை கைது செய்து இழுத்துட்டு செல்லும் அளவிற்கு மிக மோசமான ஒரு அணுகுமுறையை நடிகர் ஜோசப் விஜய் முதலமைச்சராய் பொறுப்பேற்றதிலிருந்து நடந்து கொண்டிருக்கிறது. அராஜக ஆட்சியை வைத்து எதிர்க்கட்சிகளை முடக்கிப் போடலாம் என அவர்கள் நினைக்கிறார்.

த.வெ.க. நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமை!

அதே ஸ்ரீ வைகுண்டத்தில் த.வெ.க.வை சார்ந்த ஒரு பெண் த.வெ.க. நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார், குற்றவாளிகளுக்கு ஆதரவாக த.வெ.க. எம்.எல்.ஏ. செயல்பட்டு அந்த பெண்ணை மிரட்டுவதாக அவர் புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இவ்வளவு பெரிய புகார் இருந்தும் இதுவரை அந்த எம்.எல்.ஏ. மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் ஒரு சாதாரணமான விஷயத்திற்கு உடனடியாக முன்னாள் அமைச்சர் கைது என்று சொல்லி பாய்கிறார்கள். அதேபோல முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்ய எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் இடைத்தேர்தல் தோல்வி பயம் தான். அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை கைது செய்தா அம்பாசமுத்திரத்தில் வரக்கூடிய இடைத் தேர்தலுக்கு வேலை செய்ய ஆள் இல்லாம செய்திடலாம். செந்தில் பாலாஜி அவர்களை கைது செய்தால் கரூர் மற்றும், பெருந்

துறையிலயும் தேர்தல் வேலை செய்யாமல் செய்துடலாம்.

மணல் கொள்ளைக்கு சதித் திட்டம்!

இப்படிப்பட்ட ஒரு சதித் திட்டத்தை மட்டுமே செய்து கொண்டிருக்கக்கூடிய வேலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாட்டு மக்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்குப் பதில் சொல்ல தயாரா இல்லை. இப்ப இன்னொரு பெரிய கான்ஸ்பிரசி மாதிரி மணல் கொள்ளைக்கு ஒரு பெரிய திட்டத்தை போட்டிட்டு இருக்காங்க. மணல் கொள்ளையை யாரை வச்சு நடத்தலாம்னு திட்டம் போட்டுக் கொண்டுள்ளனர் என்ற தகவலும் வருகிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்லியதன் பேரில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அணு கனிமம் சுரங்க காலத்தை நீட்டிப்பு செய்துள்ளனர். இதை பற்றி எல்லாம் கேள்வி கேட்டால் அதை திசை திருப்புதல் மட்டுமே செய்கிறார்கள் எந்தப் பதிலும் அளிப்பது இல்லை.

107 இடங்களில் தான் இவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆட்சி அமைக்க மெஜாரிட்டி இல்லாத தால முதலில் அ.தி.மு.க.வுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. லீமா ரோஸ் அ.தி.மு.க. -- த.வெ.க. பேச்சு வார்த்தை நடக்குது என்று சொன்னாங்க. ஆனா அ.தி.மு.க. என்ன டிமாண்ட் வச்சது என தெரியவில்லை.

அ.தி.மு.க. இரு பிரிவா பிரிஞ்சது. அதனால தி.மு.க. கூட்டணியில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் அங்கே போய் ஆதரவு கொடுத்து ஆட்சி அமைத்தார்கள். ஆட்சிய மைச்ச பிறகு அனைத்து தலைவர்களையும் நேரில் சந்தித்த முதல்வர் ஜோசப் விஜய் அ.தி.மு.க.வின் பிரிவினை குழுவை நேரில் சந்தித்தார்.

குதிரை பேரத்தை முதலில் தொடங்கி வைத்தவர் யார் என்றால் இன்றைய முதலமைச்சர் விஜய் அவர்கள்தான். அவர் சந்திக்கப் போகும் போதெல்லாம் ஒரு 'சோபா' அவருடனே செல்லும், சந்திப்பு முடிந்து வரும் போது ஷோபா அங்கேயே இருக்கும். இது ஒரு மெத்தேடு.

ஆட்சியை தக்கவைக்க குதிரை பேரம்!

அவர் பி.ஜே.பி.யுடன் பிரண்ட்ஷிப் ஆனாரு. பி.ஜே.பி. சொன்னாங்க நாங்க ஒரு வாஷிங்மெஷின் கொடுக்கறேன். அந்த வாஷிங்மெஷின கொண்டு போனீங்கன்னா எந்த குற்றம் செஞ்சவங்களையும் அவங்கள எல்லாம் கிளீன் பண்ணிக்கலாம். நீங்க எடுத்திட்டு போய் யூஸ் பண்ணிக்கங்கனு சொல்லி இருக்காங்க . அந்த வாஷிங் மெஷின கொண்டு வந்து , லாட்டரி டிடர்ஜென்ட் போட்டு எல்லோரையும் கிளீன் பண்ணிட்டு இருக்காரு. மோடிய விட இவரு இரண்டு மடங்கா மாறிட்டார். இந்த சோபா மாடலில் அரசு குதிரை பேரம் மூலமாக ஆட்சியை தக்க வைப்பதற்காக பார்த்துக் கொண்டிருக்கிறார். கல்லா பெட்டி கூட்டணி என விமர்சித்து விட்டு இன்று அவர்களை சேர்த்துக்கொண்டு ஷோபா மாடல் ஆட்சி நடத்துகிறார்.

அ.தி.மு.க.வை அழிக்கிறது ஷோபா மாடல் அரசு!

ஆதவ் அர்ஜீனா பேசும் போது கூறினார். ஜெயலலிதா அவர்களை கைது செய்தது தி.மு.க. என கூறுகிறார். நீதிமன்ற உத்தரவின் பேரில் தான் அன்று கண்ணியமான முறையில் கைது செய்யப்பட்டார்களே தவிர, இரவில் சென்று கதவை உடைத்தெல்லாம் கைது செய்யப்படவில்லை. 2014 இல் நீதிமன்றம் சென்ற ஜெயலலிதா கைது செய்யப்பட்டார்களே அப்போது யார் ஆட்சி இருந்தது? காங்கிரஸ் ஆட்சி தான் கைது செய்தது என ஆதவ் அர்ஜீனா சொல்வாறா? செங்கோட்டையன் சொல்வாரா? அப்படி ஜெயலலிதா அவர்களை கைது செய்த காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்துள்ளார்களே அந்தக் கூட்டணியை முறித்துக்கொண்டு போவார்களா? இல்லை ஜெயலலிதா அவர்களை கைது செய்த காங்கிரஸ் உடன் அமைச்சரவையில் இருக்க முடியாது என செங்கோட்டையன் பதவியை ராஜினாமா செய்வாரா? இப்போது அ.தி.மு.க.வை குதிரை பேரம் மூலம் இழுத்து அழிக்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறது சோபா மாடல் அரசு.

இடைத்தேர்தல் நாடகம்!

கரூர் சம்பவத்தில் காவல்துறையை வைத்து கொலை செய்தார்கள் என குற்றம் சாட்டினாரே ஆதவ் அர்ஜீனா, இப்போது காவல்துறை யார் கட்டுப்பாட்டில் உள்ளது. நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே. முதலமைச்சர் விஜய் என்ன செய்கிறார்? உலகத்திலேயே இறந்தவர்கள் வீட்டுக்குப் போகாமல் அவர்களை வரவைத்து ஆறுதல் சொன்னது இவர்கள் தான். இப்போது கரூர் போவதாக சொல்வது எல்லாம் இடைத்தேர்தலுக்கான நாடகம். கரூர் சம்பவம் நடந்து 278 நாளாகிறது. முதலமைச்சராகி 55 நாளா போகவில்லை. இப்ப இடைத் தேர்தல் வர இருப்பதால் அதற்காக கரூர் செல்கிறார்.

விஜய் காலதாமதமாக வந்தால் தான் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் இறந்தனர் என்பது அங்குள்ள மக்களுக்கு நன்கு தெரியும். அதனால் தான் கரூரில் த.வெ.க. தோற்றது. இப்போது காவல்துறை மீது ஆதவ் அர்ஜீனா வைக்கும் காவல்துறை கொன்றது என்ற குற்றச்சாட்டுக்கு இது வரை டி.ஜி.பி., உள்துறை செயலாளர் பதில் அளிக்கவில்லை. அவர்களின் விளக்கம் என்ன?

சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!

வெறும் அவதூறுகளை மட்டுமே பேசி ஒரு ஆட்சி நடந்து கொண்டுள்ளது. தினம் தினம் பாலியல் வன்கொடுமை அதிகரித்து வருகிறது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு வருகிறது. நேற்று ஒரு 5 வயது சிறுவனையும் அவனது தந்தையையும் பட்டப் பகலில் தலையை வெட்டி கொன்றிருக்கிறார்கள். இது வரை எந்த நடவடிக்கையும் இல்லை எந்தப் பதிலும் இல்லை.

தமிழ்நாட்டிற்கு ரூ.5,000 கோடி இழப்பு!

ஆணவக்கொலை பற்றி பேசவில்லை, தி.மு.க. எதிர்த்து தீர்மானம் போட்ட ஒன்றிய அரசின் புதிய 100 நாள் வேலை திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனால் ரூ.5,000 கோடி இழப்பு நமக்கு ஏற்படும். இந்த அரசு தான் இப்படி என்றால் அதன் கூட்டணியில் இருக்கிறவர்களாவது பேசுகிறார்களா? ஒரு வார்த்தை கூட பேசவில்லை. முஸ்லீம்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்து வருகிறது. அது பற்றி பேசவில்லை. கூட்டணியில் இருக்கும் முஸ்லிம் லீக்கும் பேசவில்லை. காங்கிரஸ் பற்றி யாராவது பேசினா தாங்க மாட்டீங்கனு டயலாக் பேசறாங்க. அண்ணா 1967-இல் அடித்த ஒரு அடியில் நாக் அவுட் ஆனவங்க .. நாங்க தான் காப்பாத்தி ஜசியு வில் வைத்து காப்பற்றி வந்தோம். இவர்கள் எங்களை பற்றி பேசலாமா.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்த நலத்திட்டங்கள் தான் இதுவரை நடைமுறையில் உள்ளன. த.வெ.க. கொடுத்த வாக்குறுதிகள் எதையும் முறையாக செயல்படுத்தவில்லை. மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் கட்சியாக தி.மு.க.தான் உள்ளது.

வர உள்ள இடைத்தேர் தலை திராணி இல்லாமல் தோல்வி பயத்தில், பதற்றத்தில் பொய் வழக்கு, அவதூறு செய்வது என இந்த அரசு இறங்கி உள்ளது.'

வெறுப்பு அரசியலையும், அவதூறு அரசியலையும் தமிழ்நாட்டில் செய்து வருகின்றனர். இவை அனைத்தையும் தி.மு.க. முறியடிக்கும். மக்கள் பிரச்சினைக்காக களத்தில் நின்று போராடும்.

இவ்வாறு சி.வி.எம்.பி. எழிலரசன் பேட்டியளித்தார்.

கரம்பற்றி நலம் அறிந்தார்!

அறிவு ஆலயத்தில்
"ஆண்டவரை"
கண்டேன்...
கரம்பற்றி
கனிவோடு
நலம் அறிந்தார்
விரதமிருந்து
தரிசித்த
பக்தனாக
விழி நிறைந்த
மகிழ்வோடு
வீடு திரும்பினேன்..

மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

எம்.எல்.ஏ.க்களை ராஜினாமா செய்ய வைத்த

விஜய் மீது எப்போது எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்போகிறார்கள்?

முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் மு.பாபு கேள்வி!

சென்னை, ஜூலை 4-

முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் மு.பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் தற்போது மக்கள் கூறுவது போல் தற்குறி ஆட்சி நடப்பதால் எப்போதும் நடைபெறாத சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா ஆளுங்கட்சியின் தூண்டுதலில் சர்வ சாதாரணமாக செய்யப்பட்டு வருகிறது. ஊத்தங்கரை த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜாவை ஆட்சிக்கு எதிராக செயல்பட வைக்க பேரம் பேசியதாக கூறி ஒரு சிலரை கைது செய்ததோடு முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அரசு சுமத்தியிருக்கிறது.

ஊத்தங்கரை எம்.எல்.ஏ. ராஜினாமாவும் செய்யவில்லை, த.வெ.க. ஆட்சிக்கு எதிராகவும் திரும்பவில்லை. ஆனாலும், திராவிட முன்னேற்றக்கழகம் மீது அவதூறு பரப்பும் ஒரே நோக்கில் த.வெ.க. செயல்படுகிறது. அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் எம்.எல்.ஏ.வான மன்னார்குடி எஸ்.காமராஜ் தற்போது த.வெ.க. கட்டுப்பாட்டில் இருக்கிறார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. க்கள் 6 பேரிடம் டீல் பேசி த.வெ.க.வினர் பதவியை ராஜினாமா செய்ய வைத்திருக்கிறார்கள்.

இதுபோக, தி.மு.க. சின்னத்தில் போட்டியிட்டு வென்ற ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் இருவரை ராஜினாமா செய்ய சொல்லுங்கள் என முதல்வர் விஜய் பேசியதாக வைகோ பட்டவர்த்தனமாக பேசியிருக்கிறார். அதேநேரம், எங்கள் எம்.எல்.ஏ.க்களை நானே ராஜினாமா செய்ய சொன்னேன் என்றும் வைகோ வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். தி.மு.க. முக்கிய பிரமுகர்கள் மீது அவதூறு பரப்ப துடிக்கும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவை காவல்துறை எப்போது கைது செய்யும். ராஜினாமா செய்ய சொன்ன முதல்வர் விஜய் மீது எப்போது எப்ஐஆர் பதிவு செய்யப் போகிறது?

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

பட்டப்பகலில் இரட்டைக் கொலையால் நெல்லையில் பதற்றம்!

தந்தையை கொடூரமாக வெட்டிக் கொன்ற கும்பல்!

நெல்லை, ஜூலை 4-

திருநெல்வேலி அருகே பட்டப்பகலில் தந்தை, மகனை கொடூரமாக கொலை செய்த மர்ம கும்பல், தந்தையின் தலையை வெட்டி நடுசாலையில் வைத்துவிட்டு சென்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம், கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள மூலச்சி கிராமத்தைச் சேர்ந்த காளிமுத்து, தனது இரண்டு மகன்களுடன் இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். காரில் அவரை பின்தொடர்ந்து வந்த மர்ம கும்பல், திடீரென காரால் இருசக்கர வாகனத்தின் மீது மோதி காளிமுத்துவை கீழே தள்ளியுள்ளது. காளிமுத்துவின் 5 வயது மகன் ஜெயராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். தப்பியோட முயன்ற காளிமுத்துவை விரட்டிச் சென்ற அந்த கும்பல், சரமாரியாக வெட்டிக் கொலை செய்தது. பின்னர், தலையை தனியாக துண்டித்து, 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு கொண்டு சென்ற அந்த கும்பல், கல்லிடைக்குறிச்சி அருகே கரம்பை பகுதியில் சாலையின் மையத்தில் வைத்து விட்டு தப்பிச் சென்றது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், படுகாயங்களுடன் உயிருக்குப் போராடிய காளிமுத்துவின் மூத்த மகன் சின்னராஜை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கொலை செய்யப்பட்ட காளிமுத்து, ஜெயராஜின் உடல்களை மீட்டு போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். ஏற்கனவே, இப்பகுதியில் நடைபெற்ற ஒரு கொலைக்கு பழிக்குப் பழியாகவே இந்த இரட்டைக் கொலை சம்பவம் அரங்கேறியிருப்பதும், காளிமுத்துவின் ஊரைச் சேர்ந்தவர்கள் இதில் ஈடுபட்டிருப்பதும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. பட்டப் பகலில் நடைபெற்றுள்ள இரட்டை கொலை சம்பவத்தால், கல்லிடைக்குறிச்சியில் பதற்றம் நிலவி வருகிறது.

அரசுப் பணிகளை ஆய்வு செய்த த.வெ.க. அமைச்சரின் தந்தை!

பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கடும் கண்டனம்!

காரைக்குடி, ஜூலை 4-

காரைக்குடியில் த.வெ.க. அமைச்சர் பிரபுவின் தந்தை, அரசுப் பணிகளை ஆய்வு செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே புதுவயல் பேரூராட்சி பகுதியில் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி கடந்த சில நாட்களுக்கு முன்பு துவங்கப்பட்டது. இதனை அமைத்தால் நிலத்தடி நீர் பாதிக்கும் என அப்பகுதி மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இப்பணிகளை த.வெ.க. அமைச்சர் பிரபுவின் தந்தை மற்றும் காரைக்குடி நகர தவெக நிர்வாகிகள் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர். அப்போது மக்கள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக் கூடாது என்று கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் அவர்கள் கிளம்பி சென்றனர். அரசு பணிகளை அமைச்சரின் தந்தை மற்றும் நிர்வாகிகள் ஆய்வு செய்து கருத்து கேட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அரசு அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளாக அல்லாதோர் எப்படி அரசு பணிகளை ஆய்வு செய்யலாம் என்று பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அடிதடி வழக்கு: நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக

அமைச்சர் மரிய வில்சனுக்கு அதிரடி உத்தரவு!

புதுச்சேரி,ஜூலை.4-

சட்டசபை தேர்தலில் தவெக சார்பில் ஆர்.கே. நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் மரிய வில்சன். இவர் தற்போது தமிழக நிதி அமைச்சராக பதவி வகித்து வருகிறார். இவருடைய சகோதரரான மரிய க்ளோத், புதுச்சேரி லாஸ்பேட்டை எழில் நகரில் வசித்து வருகிறார்.

தொழில் போட்டி காரணமாக மரிய வில்சனுக்கும், அவரது சகோதரருக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளது. இதற்கிடையே, தொழில் போட்டி காரணமாக மரிய வில்சன், தனது சகோதரர் மற்றும் அவரது மனைவியை வீடுபுகுந்து தாக்கியதாக புகார் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மரிய வில்சன் மீது கொலை முயற்சியில் ஈடுபட்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு புதுச்சேரி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பான விசாரணையின் போது மரிய வில்சன் ஆஜராகாத நிலையில் இன்று கட்டாயம் நேரில் ஆஜராக வேண்டும் என புதுவை மாஜிஸ்திரேட்டு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 131 'அ' வட்டம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று 03.07.2026 வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில், து.பழனி முன்னிலையில் ஜி.முனுசாமி, எஸ்.லோகநாதன், ஆட்டோ எஸ்.முரளி ஏற்பாட்டில் பொதுமக்கள் 500 பேருக்கு அறுசுவை உணவை பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு. மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., எம்.விஜயகுமார், இரா.பொன்னிவளவன், ஜெ.சீனிவாசன், ஜி.மோகன்ராஜ் ஆகியோர் வழங்கினர். உடன் ராசிமுருகன், திருமதி. சௌமியா, எஸ்.உதயகுமார், எஸ்.ரவி, ஜி.மில்லர்பிரகாசம், கே.விஸ்வநாதன், உள்ளிட்ட 131 'அ' வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.